[ஈ] மாநிலங்கள் அவைத் தேர்தலில் இரண்டு வாக்குகள் செல்லா தவையாக ஆனது குறித்து.

திரு. டி.மார்டின்: சார், விதி 83-இன் கீழ், பாயின்ட் ஆப் ஆர்டர். கண்ணிய மிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். கண்ணியம் மிக்க பேரவைத்தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்களுடைய பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறோம். ராஜ்ய சபாத் தேர்தலில் 2 வோட்டுக்கள் செல்லாத வோட்டுக்களாக ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கொண்டு வருகிற ஒழுங்குப் பிரச்சினை ராஜ்ய சபாத் தேர்தலைப் பற்றியது....

திரு. டி. மார்டின் : Sir, you allow me to speak and I will come to the context....

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்ணியமான இந்தச் சபையில் நாமெல்லாம் உறுப்பினர்கள். இரண்டு ஓட்டுக்கள் செல்லாத ஓட்டுக்களாகிவிட்டன, இதைப் பற்றி மக்கள் ஓட்டுப் போடுவதற்குக் கூடத் தெரியாத நிலைமையிலே இரண்டு ஓட்டுக்கள் ஆகிவிட்டன என்று பொது மக்கள் பேசக்கூடிய நிலைமையிலே இந்தச் சபையினுடைய கௌரவத் தைப் பாதிக்கக்கூடிய செயல் நடைபெற்று இருப்பதால் தாங்கள் அதைப் பற்றி விசாரணை நடத்தி இரண்டு ஓட்டுக்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ரூல் 83-இல் எப்படி வரும் என்பதைக் கொஞ்சம் சொல்கிறீர்களா?

Thiru T. MARTIN : Yes. The proviso to Rule 83 states—

Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order. . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்கள் 83-வது விதியைப் படிக் கிறீர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலே உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்பதைப் பற்றி அதிலே இருக்கிறது. இந்த அவையிலே இப்பொழுது எப்படி ஒழுங்கு மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டுமென்றுதான் கேட்டேன். மன்றத்திலே சில விதிமுறைகள் இருக்கின்றன, எந்த வகையிலே அவை மீறப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லவேண்டுமேயொழிய ரூல் 83-ஐ சொல்கிறீர்கள், அந்த ரூல் எல்லா வற்றிற்கும் பொது. எந்த உறுப்பினரும் 83-வது விதியின் கீழ்தான் ஒழுங்குப் பிரச்னை கொண்டுவர வேண்டும்.

திரு. நா. வீராசாமி : 20 நிமிடங்களாக இந்த மன்றத்திற்குச் சம்பந் தப்படாதவை விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் குறிப்பேடு களில் இருக்கின்றன. அவற்றைக் குறிப்பேடுகளில்.......................

6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.